# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au


## பேச்சுப்போட்டி 2022 ஆண்டு பத்து

அனைவருக்கும் வணக்கம்

### சோழர்காலத் தமிழ் இலக்கியம்

எமது தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியும் வரலாறும் கொண்டது. தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலமும், சோழர்காலமும் பொற்காலங்களாகத் திகழ்கின்றன. இவ்விரு காலத்திலும் பெருவாரியான புலவர்கள் வாழ்ந்து பெருந்தொகையான புகழ்பூத்த இலக்கியங்களைப் படைத்தனர்.

சோழர்காலத்தில் கவிச்சக்கரவர்த்திகள் என்று போற்றப்பட்ட கம்பர், ஒட்டக்கூத்தரோடு புகழேந்தி, செயங்கொண்டார், சேக்கிழார், திருத்தக்கதேவர் போன்ற சிறந்த புலவர்கள் தமிழுக்கு அழகு சேர்த்தனர்.

விருத்தப்பாவில் உயர்கம்பர் படைத்த இராமாயணம் கவிநயம் மிக்க காவியமாகும். அது இன்றளவும் கம்பரின் கவித்துவத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. கம்பர் சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி என்று வேறு பலநூல்களையும் தந்துள்ளார். ஒட்டக்கூத்தர் மிகநீண்டகாலம் சோழஅரசவையை அலங்கரித்த கவிச்சக்கரவர்த்தி. உலா பாடுவதில் வல்லவரான ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் மீதும், அவன் மகன் குலோத்துங்கசோழனைப் போற்றியும், பேரன் இராஜராஜசோழனை ஏத்தியும் மூன்று உலா நூல்களைப் பாடியுள்ளார். இவை மூவருலா எனப்படுகிறது. இவை மட்டுமன்றி குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி ஆகிய இலக்கியங்களையும் தந்துள்ளார்.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான, திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணியும், “பக்திக்குரியமொழி தமிழ்” என்பதை நிரூபிப்பது போல் மெய்யடியார் சிறப்பைத் தித்திக்கும் தேன்தமிழில் சேக்கிழார் பாடிய பெரியபுராணமும் சோழர்காலத்திலேயே தோன்றியவை. வெண்பாவிற் புகழேந்தியின் நளவெண்பாவும், பரணிக்கோர் செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும் சோழர்கால இலக்கியங்களே.

தமிழிலுள்ள சிற்றிலக்கியவகைகளில் உலா, பரணி, கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், கோவை, சதகம் என்று பல சோழர்காலத்தில் தோற்றம் பெற்று வளர்ந்தன. காப்பியகாலம் என்று போற்றப்படும் சோழர்காலத்தில் பேரிலக்கியங்கள், பக்தியிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் பல அரசவை இலக்கியங்களாகவும் வளர்ந்தன. தனிச்சுவை மிக்க இவ்விலக்கியங்களை நாமும் அறிவோம்! சுவைப்போம்! பகிர்வோம்!

நன்றி
வணக்கம்